www.Padasalai.Net

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண்.35372/இ1/2022 நாள். 21.01.2025

பொருள் : தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப்பணி - இடைநிலை ஆசிரியர்களின் "சம வேலைக்கு சம ஊதியம்" கோரிக்கை குறித்து ஆய்வு செய்து பரிந்துரை செய்ய குழு அமைக்கப்பட்டது - குழுவின் நான்காவது கூட்டம் 04.02.2025 அன்று பிற்பகல் 04.00 மணியளவில் கூட்டம் நடைபெற உள்ள தகவல் தெரிவித்தல் - சார்பாக.

பார்வை :

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 01.01.2023 நாளிட்ட செய்தி வெளியீடு.
2. தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.35372/இ1/2022, நாள்.23.01.2023.
3. அரசாணை (நிலை) எண்.25 பள்ளிக் கல்வி (தொ.க.3(1)) துறை நாள்.30.01.2023.
4. அரசுக் கடித எண்.730/தொ.க.3(1)/2023-3, நாள்.01.06.2023.
5. சென்னை-600 006, தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள். ந.க.எண்.35372/இ1/2022, நாள்.03.03.2023, 06.06.2023.
6. அரசுக் கடித எண்.730/தொ.க.3(1)/2023-5, மற்றும் 18.10.2023.
7. அரசுக் கடித எண்.730/தொ.க.3(1)/2023-6, நாள்.30.10.2023.
8. சென்னை-600 006, தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.35372/இ1/2022, நாள்.26.10.2023 மற்றும் 01.11.2023.
9. அரசாணை (நிலை) எண்.229 பள்ளிக் கல்வித் (தொ.க.3(1)) துறை, நாள்.06.12.2023.
10. அரசுக் கடித எண்.730/தொ.க.3(1)/2023-7 & 8, நாள்.13.09.2024 மற்றும் 08.01.2025.

--------

தொடக்கக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 01.06.2009-க்கு பின் இடைநிலை ஆசிரியர் பணியில் நியமனம் பெற்றவர்கள் 01.06.2009-க்கு முன் இடைநிலை ஆசிரியர் பணியில் நியமனம் பெற்றவர்களுக்கு இணையான ஊதியம் கோரும் கோரிக்கைகளை ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய பார்வை 9-ல் காணும் அரசாணையில் அமைக்கப்பட்ட குழுவின்படி நான்காவது கூட்டம் 04.02.2025 அன்று கூட்டம் நடத்துவது சார்ந்து பார்வை 10-ல் காணும் 08.01.2025 நாளிட்ட அரசுக் கடிதம் பெறப்பட்டுள்ளது.

அரசுக் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க, சம வேலைக்கு சம ஊதியம் குறித்த கோரிக்கை சார்பாக, மேற்கண்டுள்ள குழுவின் தலைவர், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்கள் தலைமையில், பார்வை 10-ல் காணும் அரசுக் கடிதத்தின்படி, 04.02.2025 அன்று பிற்பகல் 04.00 மணியளவில், கீழ்க்காணும் அட்டவணையின்படி, நடைபெறவுள்ள கருத்து கேட்பு கூட்டத்திற்கு ஐந்து சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள். மேலும் இக்கூட்டத்திற்கு ஒரு சங்கத்திற்கு இரு பிரதிநிதிகளுக்கு மிகாமல் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

www.Padasalai.Net

| வ. எண் | சங்கத்தின் பெயர் | நாள் மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | அனைத்திந்திய ஆசிரியர் பேரவை | 04.02.2025 பிற்பகல் 04.00 மணி | பள்ளிக் கல்வித் துறை கூட்டரங்கு, 6-வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை-9. |
| 2 | தமிழ்நாடு தொடக்க நடுநிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம் | | |
| 3 | தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் | | |
| 4 | ஜே.எஸ்.ஆர். தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி | | |
| 5 | தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கம் (TIAS) | | |

மேற்குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட / அங்கீகரிக்கப்படாத சங்கப் பிரதிநிதிகளை தவிர்த்து மற்ற சங்கப் பிரதிநிதிகளை பிறிதொரு நாளில் நடைபெறும் கூட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

27/01/25

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்

1. அனைத்திந்திய ஆசிரியர் பேரவை,
   3, வ.உ.சி நகர், திருநெல்வேலி மாவட்டம் - 627002.
2. தமிழ்நாடு தொடக்க நடுநிலைப் பள்ளி
   பட்டதாரி ஆசிரியர் சங்கம், 5E, முல்லை காம்ப்ளக்ஸ்,
   ஆற்காடு, வேலூர் மாவட்டம் - 632 503.
3. தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம்,
   எண்.22, செந்தில் நகர், பழைய பெருங்களத்தூர்,
   சென்னை.
4. ஜே.எஸ்.ஆர். தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி,
   45, ஆரோக்கியமாதா கோவில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 15.
5. தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் சங்கம்,
   A.K. நகர், காஞ்சிரங்கால், சிவகங்கை மாவட்டம்-630 561.

நகல்

அரசுச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.